பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**18 06 2026** **06 45**

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உலகளாவிய பொருளாதாரத்திற்கு ஹோர்முஸ் நீரிணையை திறப்பது முக்கிய நடவடிக்கை என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நாட்டில் நடப்பாண்டு இறுதிக்குள் 300 ஜிகாவாட் அளவிலான புதைபடிவமற்ற எரிபொருள் உற்பத்தி செய்யப்படும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

3. தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் ஆளுநர் உரையுடன் இன்று தொடங்குகிறது.

4. தமிழகத்தில் கோயம்புத்தூர், திண்டுக்கல், சிவகங்கை உள்ளிட்ட 13 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஆஃப்கனிஸ்தான் அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 170 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

உலகளாவிய பொருளாதாரத்திற்கு ஹோர்முஸ் நீரிணையை திறப்பது முக்கிய நடவடிக்கை என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஃபிரான்சில் **Evian** நகரில் நடைபெற்ற **G7** உச்சிமாநாட்டிற்கு இடையே அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் உடன் இருதரப்பு பேச்சு நடத்தியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

தடையற்ற வகையில் கப்பல் போக்குவரத்து நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும் என்று பிரதமர் வலியுறுத்தினார்.

கடல்சார் வர்த்தகத்திற்காக லட்சக்கணக்கான இந்திய மாலுமிகள் உலகின் பல்வேறு பிராந்தியங்களில் சேவையாற்றி வருவதாக கூறினார்.

மாலுமிகளின் பங்களிப்பு குறித்து குறிப்பிட்ட பிரதமர், அவர்களுடைய பாதுகாப்பு மிகவும் முக்கியமானது என்று தெரிவித்தார்.

மேற்காசியாவில் அமைதிச் சூழலை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டதற்காக திரு. ட்ரம்ப்புக்கு அவர் பாராட்டு தெரிவித்தார்.

இப்பிராந்தியத்தில் அமைதி திரும்பும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தக பேச்சுகள் சுமூகமாக நடைபெறுவது குறித்து திரு. நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்தார்.

இதற்கிடையே யுக்ரைன் அதிபர் திரு. ஜெலன்ஸ்கியையும் பிரதமர் சந்தித்துப் பேசினார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இந்தியா - யுக்ரைன் இடையேயான ஒத்துழைப்பை ஆய்வு செய்த தாங்கள், இருநாட்டு வர்த்தக உறவுகளை போருக்கு முந்தைய நிலையில் இருந்ததைப் போன்று சுமூகமாக நடைபெற ஒத்துழைக்க வேண்டும் என்று முடிவு செய்ததாக கூறினார்.

இந்தியா எப்போதும் அமைதியின் பக்கமே இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மற்றொரு பதிவில் குறிப்பிட்டுள்ள பிரதமர், G7 உச்சிமாநாட்டில் தாம் பங்கேற்றது ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக பிரதமர் கூறியுள்ளார்.

நிர்வாகம் மற்றும் கொள்கை வகுத்தல் ஆகியவற்றில் இந்தியாவின் கருத்துகளையும், முயற்சிகளையும் எடுத்துரைப்பதற்கான வாய்ப்பு தமக்கு கிடைத்ததாக தெரிவித்துள்ளார்.

வளர்ந்து வரும் நாடுகளுடன் நெருக்கமாக பணியாற்ற வேண்டியதன் அவசியம் குறித்தும் தாம் இம்மாநாட்டில் விளக்கியதாக கூறியுள்ளார்.

ஃபிரான்ஸ் பயணத்தின் இறுதிக்கட்டமாக இன்று பாரீஸ் செல்வதாகவும், அங்கு நடைபெறும் தொழில்நுட்ப மாநாட்டில் உரையாற்ற உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் இந்திய வம்சாவளியினரை தாம் சந்திக்க உள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

நாட்டில் நடப்பாண்டு இறுதிக்குள் **300** ஜிகாவாட் அளவிலான புதைபடிவமற்ற எரிபொருள் உற்பத்தி செய்யப்படும் என்று புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய அவர், உலகின் மிக விரைவான மிகப்பெரிய தூய்மை எரிசக்தி மாற்றங்களில் ஒன்றை இந்தியா கொண்டுள்ளதாக அவர் கூறினார்.

கடந்த 12 ஆண்டுகளில் எரிசக்தி மாற்றத் துறையில் இந்தியா உலகளாவிய தலைமைத்துவமாக உருவெடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கம் குறித்து குறிப்பிட்ட அமைச்சர், பசுமை ஹைட்ரஜன் தொழில்நுட்பங்களில் புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவளிக்க 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இத்துறையில் 8 லட்சம் கோடி ரூபாய் முதலீட்டை ஈர்ப்பது, 6 லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதை நோக்கமாக கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஆண்டுக்கு 50 மில்லியன் டன் கார்பன் வெளியீட்டைக் குறைப்பதும் தேசிய பசுமை ஹைட்ரஜன் திட்டத்தின் நோக்கம் என்று திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறினார்.

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.

தவெக தலைமையிலான புதிய அரசு பதவியேற்றபின் நடைபெறும் முதல் கூட்டத்தொடர் என்பதால் ஆளுநர் திரு. ராஜேந்திர விஷ்வநாத் அர்லேகர் உரையுடன் கூட்டத்தொடர் தொடங்குகிறது.

ஆளுநர் உரையின் தமிழாக்கத்தை சட்டப்பேரவைத் தலைவர் திரு. ஜே.சி.டி. பிரபாகர் வாசிப்பார்.

அரசு நலத்திட்டங்கள், கொள்கைகள் குறித்து ஆளுநர் உரையில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பின்னர் அலுவல் ஆய்வுக் குழு கூடி கூட்டத்தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து முடிவு செய்யப்படும்.

<<<<>>>>

தமிழக-கேரள எல்லைப் பகுதியான புளியரை சோதனைச்சாவடி மற்றும் குற்றாலத்தில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கேரளா செல்லும் கனிமவளங்களை ஏற்றிச் செல்லும் லாரிகளுக்கு நேரக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை நேரக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Senthil — 38 Sec)**

<<<>>>

தமிழகத்தில் கோயம்புத்தூர், திண்டுக்கல், சிவகங்கை உள்ளிட்ட **13** மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, தேனி, திண்டுக்கல், மதுரை, ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களின் சில பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

கம்போடியாவில் வேலை வாங்கித் தருவதாக கூறி இணையவழிக் குற்றங்களில் ஈடுபடுத்தப்பட்ட பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்த **221** பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

-------------

அமெரிக்கா-ஈரான் இடையேயான ஒப்பந்தத்தின் மூலம் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறையும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

-------------

இந்தியா-இங்கிலாந்து இடையேயான விரிவான பொருளாதார வர்த்தக ஒப்பந்தம் அடுத்த மாதம் 15ஆம் தேதி அமலுக்கு வரும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

-------------

ஜார்கண்டில் இருந்து 2 மாநிலங்களவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் இன்று நடைபெறுகிறது.

-------------

E-20 ரக பெட்ரோலைப் பயன்படுத்தும் வாகனங்களின் எரிபொருள் மூடிகளை சுற்றி எறும்புகள் மொய்ப்பதாக வரும் தகவல் தவறானது என்று பத்திரிகை தகவல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

-------------

தமிழ்நாட்டில் முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்காக புதிய வீடுகள் கட்டித் தருவது தொடர்பான பணிகளின் முன்னேற்றம் குறித்து அத்துறைக்கான அமைச்சர் திரு. தென்னரசு ஆய்வு மேற்கொண்டார்.

-------------

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி பகுதியில் பள்ளி மாணவிகளுக்கு தொல்லை கொடுத்த 2 பேரை காவல்துறையினர் போக்சோ சட்டத்தின்கீழ் கைது செய்தனர்.

-------------

பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் மாணவர்களுக்கான குறைதீர் நாள் கூட்டம் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று நடைபெறுகிறது.

-------------

கோயம்புத்தூரில் உரிய பதிவில்லாமல் விற்பனைக்கு வைத்திருந்த 17 லட்சம் ரூபாய் மதிப்பிலான தொலைக்காட்சி உள்ளிட்ட மின்னணு சாதனங்களை இந்திய தர நிர்ணய அமைவன அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

-------------

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே 2009ஆம் ஆண்டு கோயில் காவலாளியை கொலை செய்த வழக்கில் 2 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்து ஓசூர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

-------------

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே விவசாயி இடமிருந்து கொள்முதல் செய்த நெல்லுக்கான தொகையை விடுவிக்க லஞ்சம்

வாங்கியதாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக ஊழியரை காவல்துறையினர் கைது செய்தனர்.

-------------

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு அறிவியல் பாட விடைத்தாள் நகலை இன்று பிற்பகல் பதிவிறக்கம் செய்யலாம் என்று அரசுத் தேர்வுகள் இயக்ககம் தெரிவித்துள்ளது.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஆஃப்கனிஸ்தான் அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 170 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியது.

லக்னோவில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா 49 புள்ளி 5 ஓவரில் 402 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

403 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ஆஃப்கனிஸ்தான், 44 புள்ளி 3 ஓவரில் 232 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இந்திய அணியின் பந்துவீச்சாளர்கள் அர்ஷ்தீப் சிங், **Gurnoor Brar** ஆகியோர் தலா **3** விக்கெட்டையும், பிரின்ஸ் யாதவ் **2** விக்கெட்டையும் வீழ்த்தினார்கள்.

மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் போட்டி நாளை மறுநாள் சென்னையில் நடைபெற உள்ளது.

-----------

உலகக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா **95** ரன் வித்தியாசத்தில் நெதர்லாந்தை வென்றது.

லீட்சில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில் **5** விக்கெட் இழப்புக்கு **209** ரன் எடுத்தது.

ஸ்மிருதி மந்தனா **74** ரன்னும், ஷஃபாலி வர்மா **55** ரன்னும் எடுத்தனர்.

**210** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய நெதர்லாந்து **17** புள்ளி **3** ஓவரில் **114** ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இந்திய அணியின் பந்துவீச்சாளர் ஸ்ரீ சரணி **4** விக்கெட் வீழ்த்தினார்.

**<<<<The End>>>>**